# மரபு நம் உரிமை! அதை மீட்டெடுத்தல் தமிழர்தம் கடமை!

## மதுரையில் – திருமலை நாயக்கர் அரண்மனை ஒளிர்வதையொட்டி – சமூக வலைதளப் பதிவில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!



**சென்னை, ஜூலை 27-**

**நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசுவின் சமூக வலைதளப் பதிவை மேற்கோள்காட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்ட வலைதளப் பதிவு வருமாறு:-**

தூங்கா நகருக்கு மேலும் எழில் கூட்டிடும் வகையில் திருமலைநாயக்கர் அரண்மனை ஒளிர்கிறது! கண்களைக் கவர்கிறது!

சுற்றுலாப் பயணிகளும் பொதுமக்களும் அதிகம் காணும் பகுதிகளாக கீழடியும் – இந்த அரண்மனையும் திகழட்டும்!

இவற்றைப் போலவே, நெல்லையில் 'பொருநை அருங்காட்சியகம்' திறப்பதற்கான பணிகள் தொல்லியல் துறை சார்பில் விரைந்து முடிக்கப்படும் என எதிர்பார்க்கிறேன்.

**மரபு நம் உரிமை; அதை மீட்டெடுத்தல் தமிழர்தம் கடமை!**

இவ்வாறு அப்பதிவில், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.



தமிழ்நாடு அரசின் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் நேற்று முன்தினம் (25.07.2024) புதுதில்லியில், ஒன்றிய அரசின் ஜல் சக்தி துறை அமைச்சர் சி.ஆர். பாட்டீல் அவர்கள் மற்றும் ஒன்றிய ஜல் சக்தி துறை இணை அமைச்சர்கள் வி. சோமண்ணா, ராஜ் பூஷன் சௌத்திரி ஆகியோரை சந்தித்து, தமிழ்நாட்டின் பன்மாநில நதிநீர் பிரச்சினைகள், நதிநீர் இணைப்பு திட்டங்களை செயல்படுத்துதல், பாசன கட்டமைப்புகளை சீரமைக்கும் திட்டங்களுக்கு நிதியுதவி பெறுதல் ஆகிய கோரிக்கைகள் அடங்கிய மனுவினை வழங்கினார். இந்நிகழ்வின் போது தமிழ்நாடு அரசின் புதுதில்லிக்கான சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன், தமிழ்நாடு அரசின் நீர்வளத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், தமிழ்நாடு அரசின் கூடுதல் உள்ளுறை ஆணையாளர் (தமிழ்நாடு ஆணையாளர் (தமிழ்நாடு இல்லம்) ஆஷிஷ் குமார், காவிரி தொழில்நுட்பக் குழு தலைவர் ஆர்.சுப்பிரமணியன் ஆகியோர் உடனிருந்தனர்.

## ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டை வஞ்சித்த

# பாசிச பா.ஜ.க. அரசைக் கண்டித்து மாபெரும் ஆர்ப்பாட்டம்!

## மாவட்டத் தலைநகரங்களில் இன்று நடைபெறுகிறது !

**சென்னை, ஜூலை 27 -**

**ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டை வஞ்சித்த பாசிச பா.ஜ.க. அரசைக் கண்டித்து, இன்று தமிழ்நாடெங்கும் மாவட்டத் தலைநகரங்களில் கழகத்தின் சார்பில் மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.**

அதன் விபரம் வருமாறு:-

ஒரு நாட்டின் நிதிநிலை அறிக்கை என்பது இந்தியத் திருநாட்டின் அனைத்து மாநிலங்களுக்கும் உரிய பங்கினைப் பகிர்ந்தளித்து நாடு முழுவதும் சமச் சீரான வளர்ச்சியை உருவாக்கிட உதவுவதுடன், நாட்டில் வாழும் கடைக்கோடி மனிதர்களின் வாழ்வை மேம்படுத்தும் கொள்கைப் பிரகடனமாகவே இருக்க வேண்டும்.

ஆனால் இந்த ஆண்டின் ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கை, ஒட்டுமொத்த இந்திய நாட்டிற்கான நிதிநிலை அறிக்கையாகத் தெரியவில்லை. மாறாக, தங்கள் ஆட்சியைக் காப்பாற்றிக் கொள்வதற்காக சில மாநிலங்களுக்கு மட்டும் நிதியை தாராளமாக அள்ளிக் கொடுத்தும், நாட்டின் வளர்ச்சியில் பெரும் பங்கு வகித்து வரும் தமிழ்நாடு போன்ற மாநிலங்கள் மீது வன்மத்தைக் கக்கிடும் வகையிலும் இந்த ஆண்டின் ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கை அமைந்திருக்கிறது.

**தமிழ்நாட்டை முற்றிலும் புறக்கணித்த ஒன்றிய அரசு!**

மெட்ரோ ரயில் திட்டத்திற்கான நிதி, தமிழ்நாடு சந்தித்த இரண்டு தொடர் பேரிடர் இழப்புகள் ஆகியவற்றிற்கு நிதி வழங்கிட வேண்டுமென்று தமிழ்நாடு முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்கள் முன் வைத்த கோரிக்கைகளை முற்றிலுமாகப் புறக்கணித்து, சில மாநிலங்களுக்கு மட்டும் பேரிடர் நிதி அள்ளி வழங்கப்பட்டுள்ளது.

ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் **"மாற்றாந்தாய்ப் போக்குடன் தமிழ்நாட்டை வஞ்சித்த பாசிச பா.ஜ.க. ஒன்றிய அரசைக் கண்டித்து இன்று (27.07.2024 - சனிக்கிழமை) காலை 10.00 மணியளவில், மாவட்ட தலைநகரங்களில் தி.மு.க. சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்"** நடைபெறும்.

**மாவட்டம் முழுதும் நமது கண்டனத்தைப் பதிவு செய்வோம்!**

மாவட்டக் கழக நிர்வாகிகள் கழக நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் தலைமையில், கழக முன்னணியினர் முன்னிலையில் நடைபெறும் இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட, கிளைக் கழகச் செயலாளர்கள் நிர்வாகிகள், அனைத்து அமைப்புகளில் உள்ள அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட அனைவரும் பங்கேற்கின்ற வகையில் மாவட்டக் கழகச் செயலாளர்கள் உரிய ஏற்பாடுகளைச் செய்து, தமிழ்நாடு அரசை வஞ்சிக்கும் ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசுக்கு தங்கள் கண்டனத்தைப் பதிவு செய்திட வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**ஆர்ப்பாட்ட விவரங்களை தலைமைக் கழகத்திற்குத் தெரிவித்திடுக!**

தத்தமது மாவட்டங்களில் நடைபெறும் ஆர்ப்பாட்டம் குறித்த விவரத்தை தலைமைக் கழகத்திற்கு உடனே தெரிவித்திட வேண்டுமெனவும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு தலைமைக் கழகம் சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

# ஒழுங்கு நடவடிக்கை!

## தலைமைக் கழக அறிவிப்பு!

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், காஞ்சிபுரம் மாநகரத்தைச் சேர்ந்த மாவட்ட பிரதிநிதி எஸ்.வி.பிரகாஷ் மற்றும் மாவட்ட கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளர் கே.ஆர்.டில்லிகுமார் ஆகியோர் கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டு வந்ததால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (Suspension) வைக்கப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்- 25.07.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

## சென்னையில்

# ஐபேட்கள் தயாரிக்கிறது ஃபாக்ஸ்கான் நிறுவனம்!

சென்னை, ஜூலை 27 –

உலக அளவில் டிஜிட்டல் சாதன பயனர்களிடையே பிரபலமான, அமெரிக்காவின் ஆப்பிள் நிறுவனம், தனது ஐபோன்களை தமிழ்நாட்டின் சென்னையில் உற்பத்தி செய்கிறது. திருப்பெரும்புதூரில் ஒப்பந்த அடிப்படையில் எலக்ட்ரானிக் பொருட்களை உற்பத்தி செய்து வரும் ஃபாக்ஸ்கான் நிறுவனம், ஐபோன்கள் தயாரிப்பை மேற்கொண்டு வருகிறது.

இந்நிலையில் ஆப்பிள் நிறுவனத்தின் மற்றொரு தயாரிப்பான, ஐபேட்களை உற்பத்தி செய்ய ஃபாக்ஸ்கான் நிறுவனம் முடிவு செய்துள்ளது. தொழில் முதலீடுகளுக்கு உகந்த மாநிலமாக தமிழ்நாடு திகழும் நிலையில், திருப்பெரும்புதூர் தொழிற்சாலையின், உற்பத்தித் திறனை இரட்டிப்பாக்க அந்நிறுவனம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

இதுதொடர்பாக தமிழ்நாடு அரசுடன், ஏற்கனவே ஆலோசனை நடத்தி உள்ளதாக ஃபாக்ஸ்கான் நிறுவனம் தெரிவித்துள்ளது. இதன்மூலம், முதலீடுகள் அதிகரிப்பதுடன், புதிய வேலைவாய்ப்புகளும் உருவாக்கப்பட இருக்கிறது.





கீழ்பென்னாத்தூர் தொகுதிக்குட்பட்ட கீழ்பென்னாத்தூர் பேரூராட்சி மற்றும் துரிஞ்சாபுரம் ஊராட்சி ஒன்றியம் ஊசாம்பாடி கிராமத்தில் நடைபெற்ற "மக்களுடன் முதல்வர்" திட்ட சிறப்பு முகாம்களில் தமிழ்நாடு சட்டப்பேரவை துணைத்தலைவர் கு.பிச்சாண்டி கலந்து கொண்டார். மேலும் மக்களுடன் முதல்வர் திட்டத்தின் கீழ் பொதுமக்களிடம் இருந்து பெறப்பட்ட தகுதியான மனுக்கள் மீது சம்மந்தப்பட்ட துறைகளின் மூலம் உடனடி தீர்வு கண்டு அதற்கான சான்றிதழ்களையும் பயனாளிகளுக்கு வழங்கினார். இந்நிகழ்வில் ஒன்றிய செயலாளர்கள் வி.பி.அண்ணாமலை, ஆராஞ்சி ஆறுமுகம், பாரதிராமஜெயம், இரா.ராஜேந்திரன், ஒன்றிய குழுத் தலைவர்கள் தமயந்தி ஏழுமலை, அய்யாகண்ணு, பொதுக்குழு உறுப்பினர் பாலு, ஒன்றிய பிரதிநிகள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

## நிலத்தடி மின்னணு காப்பீட்டு முறையில்

# வாடிக்கையாளர்களுக்கான பயன்பாடுகள் உறுதி செய்யப்பட்டுள்ளதா?

## மக்களவையில் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் கேள்வி!

*புதுடெல்லி, ஜூலை 27-*

*திராவிட முன்னேற்றக் கழக, அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் மக்களவையில், இந்திய காப்பீட்டு ஒழுங்குமுறை ஆணையத்தால் அறிவிக்கப்பட்டுள்ள மின்னணு காப்பீட்டு முறையினால் வாடிக்கையாளர்களுக்கான பயன்பாடுகள் அதிகரித்துள்ளனவா? என்றும் அதன் விவரங்களை தெரிவிக்க இயலுமா? என்றும் ஒன்றிய நிதித் துறை இணை அமைச்சர் பங்கஜ் சௌத்திரி கேள்வி எழுப்பினார்.*

*இதற்கு ஒன்றிய இணை அமைச்சர் பங்கஜ் சௌத்ரி அவர்கள் அளித்த பதில் பின்வருமாறு:*

*வாடிக்கையாளர்களுக்கான மின்னணு காப்பீட்டு முறையை அறிமுகப்படுத்த தேவையான கொள்கை முடிவுகளை கடந்த ஏப்ரல் 2024-ல், இந்திய காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் வளர்ச்சி ஆணையம் உறுதி செய்துள்ளது என்றும், இக்கொள்கையின்படி, ஒவ்வொரு காப்பீட்டு நிறுவனமும் மின்னணு முறையில் காப்பீடு செய்வதற்கான வசதிகளை வாடிக்கையாளர்களுக்கு ஏற்படுத்தி தர வேண்டுமென்றும், அதற்கான கணிணி பாதுகாப்பு முறைகளை வசதி செய்து தர வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றும், வாடிக்கையாளர்கள் கேட்டுக்கொள்ளும் பட்சத்தில் வழக்கமான நடைமுறைகளையும் உறுதி செய்ய வேண்டும் என வழிவகை செய்யப்பட்டுள்ளதாகவும் மத்திய இணையமைச்சர் மக்களவையில் தெரிவித்தார்.*



*மேலும், மின்னணு காப்பீட்டு முறையில் அனைத்து வாடிக்கையாளர்களையும் காப்பீட்டு முறை சென்றடையும் என்றும், புதுப்பிக்கவும், காப்பீட்டு கோருவதையும் எளிமைப்படுத்தப்பட்டுள்ளது என்றும் காப்பீட்டு நிறுவனங்களின் செலவீனம் வெகுவாக குறைக்கப்படும் என்றும் வழக்கமான முறைகளில், தேவையான சான்றிதழ்கள் கிடைக்காமல் போவது தவிர்க்கப்படும் என்றும், இதனால் பல்வேறு வகைகள வாடிக்கையாளர்களின் பயன்பாடுகள் மின்னணு காப்பீட்டு முறையினால் உறுதி செய்யப்படும் என்றும் ஒன்றிய நிதித்துறை இணைஅமைச்சர் பங்கஜ் சௌத்திரி பதில் அளித்தார்.*

## இராணிப்பேட்டை – முத்துக்கடையில் திரளாகப் பங்கேற்போம்!

# ஒன்றிய அரசைக் கண்டித்து மாபெரும் ஆர்ப்பாட்டம்!

## அமைச்சர் ஆர்.காந்தி தலைமையில் நடந்த மாவட்ட அவசர செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம்!

*இராணிப்பேட்டை ஜூலை, 27.*

*இராணிப்பேட்டை மாவட்ட திமுக அவசர செயற்குழு கூட்டம் மாவட்ட திமுக அலுவலகத்தில் நடந்தது கூட்டத்துக்கு மாவட்ட அவைத் தலைவர் ஏ.கே சுந்தரமூர்த்தி தலைமை தாங்கினார்.மாநிலசுற்றுச்சூழல்அணி அமைப்பாளர் ஆர். விநோத்காந்தி, மாவட்டத் துணைச் செயலாளர்கள் எம் சிவானந்தம், கே.துரைமஸ்தான் தலைமை செயற்குழு உறுப்பினர் மு. கண்ணையன் க.சுந்தரம், அ. அசோகன் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜெ.எல். ஈஸவரப்பன் எம்.எல்.ஏ., மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ஜெயந்தி திருமூர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.*

*மாவட்டச் செயலாளர் - அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி தீர்மானங்களை விளக்கிப் பேசினார்.*

*கூட்டத்தில் நிறை வேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு :ஒரு நாட்டின் நிதிநிலை அறிக்கை என்பது இந்திய திருநாட்டின் அனைத்து மாநிலங்களுக்கும் உரிய பங்கினை பகிர்ந்தளித்து நாடு முழுவதும் சமச்சீரான வளர்ச்சியை உருவாக்கிட உதவுவதுடன், நாட்டில் வாழும் கடைக்கோடி மனிதர்களின் வாழ்வை மேம்படுத்தும் கொள்கை பிரகடனமாகவே இருக்க வேண்டும். ஆனால் இந்த ஆண்டின் ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கை ஒட்டுமொத்த இந்திய நாட்டிற்கான நிதிநிலை அறிக்கையாக தெரியவில்லை. மாறாக தங்கள் ஆட்சியை காப்பாற்றிக் கொள்வதற்காக சில மாநிலங்*

*களுக்கு மட்டும் நிதியை தாராளமாக அள்ளிக் கொடுத்தும், நாட்டின் வளர்ச்சியில் பெரும் பங்கு வகித்து வரும் தமிழ்நாடு போன்ற மாநிலங்கள் மீது வன்மத்தை கக்கிடும் வகையில் இந்த ஆண்டின் ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கை அமைந்திருக்கிறது.*

*மெட்ரோ ரயில் திட்டத்திற்கான நிதி, தமிழ்நாடு சந்தித்த இரண்டு தொடர் பேரிடர் இழப்புகள், ஆகியவற்றிற்கு நிதி வழங்கிட வேண்டுமென்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதி அவர்கள், முன்வைத்த கோரிக்கைகளை முற்றிலுமாக புறக்கணித்து சில மாநிலங்களுக்கு மட்டும் பேரிடர் நிதி அள்ளி வழங்கப்பட்டுள்ளது.*

*ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் மாற்றான் தாய் போக்குடன் தமிழ்நாட்டுக்கு வஞ்சித்த பாசிச பாஜக ஒன்றிய அரசை கண்டித்து இன்று 27 சனிக்கிழமை காலை 10 மணியளவில் ராணிப்பேட்டை முத்துக்கடையில் நடைபெறும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாநில , மாவட்ட கழக நிர்வாகிகள், கழக நாடாளுமன்ற , சட்டமன்ற உறுப்பினர்கள் தலைமையில் கழக முன்னணியினர் முன்னிலையில் நடைபெறும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட , ஒன்றிய, நகர, பேரூர் வட்டக் கிளைக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள் அனைத்து அமைப்புகளில் உள்ள அணிகளின் நிர்வாகிகள் ,*

*உள்ளாட்சி அமைப்புகளின் பிரிதிநிதிகள் உள்ளிட்ட அனைவரும் பங்கேற்கின்ற வகையில் தமிழ்நாடு அரசை வஞ்சிக்கும் ஒன்றிய பாசிச பாஜக அரசுக்கு தங்கள் கண்டனத்தை பதிவு செய்திட வேண்டுமென தீர்மா னிக்கப்படுகிறது.*

*நடந்து முடிந்த விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலில் , மாவட்ட கழக செயலாளர், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி தலைமையில் பணியாற்றி நமக்கு ஒதுக்கப் பட்ட வாக்குச்சாவடிகளில், கழக வேட்பாளருக்கு அதிகமான வாக்குகளை பெறுவதற்கு, கடினமாக உழைத்த, மாநில, மாவட்ட, செயற்குழு, பொதுக்குழு நகர ,பேரூர் மற்றும் மாவட்ட அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் அனைவருக்கும் பாராட்டும், நன்றியையும் கூட்டம் தெரிவித்துக் கொள்கிறது.*

## வாட்ஸ் அப்பில் வந்த செய்தி !

